NEW WAY OF BEING CHURCH

# newbec

26 மே 2024
மூவொரு கடவுள் பெருவிழா

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)




# என் வாழ்க்கை தமதிரித்துவத்தின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறதா?

தூய திரித்துவத்தின் மறையுண்மை கிறிஸ்தவ நம்பிக்கை மற்றும் வாழ்க்கையின் மையமான மறையுண்மையாகும். மற்ற அனைத்து நம்பிக்கையின் மறையுண்மைகளுக்கும் இதுவே ஆதாரம். (கம 234) தூய தமதிரித்துவத்தின் வாழ்க்கையில் நாம் பங்குகொள்ளும்போது, கடவுளின் அன்பில் பங்குகொள்ள மற்றவர்களையும் அழைக்கிறோம். இது திருஅவையின் பணி. நமது பணி.

**குடும்பம் என்பது நபர்களின் ஒற்றுமை- இது தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒற்றுமையின் அடையாளம் மற்றும் சாயல்.**

கம: 2205







### இன்றைய இறைவார்த்தை:

இச: 4: 32-34, 39-40

திபா: 33: 4-6, 9,18-19, 20,22

உரோ: 8: 14-17

மத்: 28: 16-20

இன்றைய முதல் வாசகத்தில் தமது மக்கள் மனசோர்வடைந்தவர்களாகவும் ஊக்கமிழந்தவர்களாகவும் இருப்பதையும் மோசே பார்க்கிறார். படைப்பின் காலத்திலிருந்து கடந்துவந்தக் காலத்தைப் பற்றி சிந்திக்க அவர்களை அழைக்கிறார். அடிமைத் தனத்திலிருந்து மீட்டுக்கொண்டுவர கடவுள் செய்த அனைத்து செயல்களையும் நினைத்துப் பார்க்க அழைக்கிறார். யாவே ஒருவரே கடவுள் என்றுக் கற்பிக்கிறார். அவரின் சட்டங்களையும் கட்டளைகளையும் கடைப்பிடித்தால், அவர்களும் அவர்களின் தலைமுறையினரும் அவர் கொடுக்கும் நாட்டில் என்றென்றும் வாழ்வார்கள் என்று அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கிறார். கடவுள் தம் குழந்தைகளை எப்போதும் விரக்தியில் விட்டு விடுவதில்லை.

கடவுளை, “அப்பா, தந்தாய்” என்று அழைக்க தூய ஆவியானவர் நம்மைத் தூண்டுகிறார். இரண்டாம் வாசகத்தில் ஆவியாரால் தூண்டப்பட்ட அனைவரும் கடவுளின் மக்கள் என்று பவுல் கூறுகிறார். நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். நம்முடைய ஆவி, இயேசுவோடும் தந்தையோடும் தூய ஆவியாரின் வழியாக ஒன்றுப்பட்டுள்ளது. இது ஒரு எண்ணமோ உணர்வோ அல்ல. ஆனால் தூய ஆவியாரின் வல்லமை, நம்முள் இருந்து, நம்மை நகர்த்துகிறது.

நற்செய்தியில் இயேசு தாம் கடவுளின் மகன் என்னும் அதிகாரத்தை வலியுறுத்துகிறார். அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் அளித்து, உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கவும், தமதிரித்துவ ஆட்களான, தந்தை, மகன் , தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்கு அளிக்கவும் அதிகாரம் அளிக்கிறார். இது திருஅவையின் திருவழிபாட்டில் பிரதிபலிக்கிறது. திருமுழுக்குப் பெற்றுக்கொள்பவர் கிறிஸ்துவ சமூகத்தில் இணையும்போது, மூவொரு கடவுளின் பெயரால், திரித்துவத்தின் வாழ்க்கையில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒன்றிப்பு, நம்முடைய குடும்பங்களிலும், சமூகத்திலும் பிரதிபலிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் சுயநலம் கொண்டவர்களாக வாழமுடியாது. இந்த ஒற்றுமையை நம் வழியாக பிறருக்கு செலுத்தும் அன்பில் எடுத்துக்காட்ட வேண்டும். ஒருமைப்பாடு, நம்பிக்கை நிறைந்து, ஒருவருக்கொருவர் நமது சுற்றுச்சூழலுடன் சரியான இணக்கத்துடன் தூய திரித்துவத்தின் அன்பின் உரையாடலில் வாழ்ந்துகாட்ட கடவுளின் குடும்பமாக நமக்கு சவால் விடப்படுகிறது.



**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org